இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 280 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 08 – வெள்ளிக்கிழமை 22 மே 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 280 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 08 - Friday 22 May 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## உத்தரப் பிரதேசத்தின் பாண்டா - உலகின் மிக வெப்பமான நகரம்!

லக்னோ, மே 22-

உத்தரபிரதேச மாநிலம் புந்தேல்கண்ட் பிராந்தியத்தில் உள்ள பாண்டா மாவட்டம் கடந்த திங்கட்கிழமை அன்று இந்தியாவின் மிக வெப்பமான பகுதியாக உருவெடுத்தது. அங்கு பகல் நேர வெப்பநிலை 47.6 டிகிரி செல்சியஸாக பதிவாகி, உலகின் மிக உயர்ந்த வெப்ப நிலையை எட்டியுள்ளது.

கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த மாவட்டத்தில் மே மாதத்தில் மிக அதிக வெப்பநிலை பதிவாகி உள்ளது. இதற்கு முன்பு, கடந்த ஏப்ரல் 27ம் தேதியும் இந்த மாவட்டத்தில் 47.6 டிகிரி செல்சியஸ் வெப்பயம் பதிவானதையடுத்து, உலகின் வெப்பமான நகரங்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

மேலும், மே 19 (48.2 டிகிரி), மே 17 (46.4 டிகிரி) மற்றும் ஏப்ரல் 17 (45.4 டிகிரி) ஆகிய மூன்று நாட்களில் பாண்டா ஆசியாவிலேயே மிக அதிக வெப்ப நிலையைப் பதிவு செய்துள்ளது. இருப்பினும், பாண்டா மாவட்டத்தின் வரலாற்றிலேயே மிக உயர்ந்த வெப்ப நிலையாக ஜூன் 10, 2019 அன்று பதிவான 49.2 டிகிரி செல்சியஸ் மட்டுமே நீடிக்கிறது. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள புதிய மாற்றம் என்னவென்றால், இந்த நகரம் அடிக்கடி 47 மற்றும் 48 டிகிரி செல்சியஸைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

வறண்ட பாறைகள் நிறைந்த நிலப்பரப்பு, மறைந்து வரும் பசுமைப் போர்வை, இடைவிடாத மணல் கொள்ளை மற்றும் வற்றிப்போகும் ஆறுகள் ஆகியவற்றால், பாண்டா மாவட்டம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு வெப்பத் தீவாக மாறி வருகிறது.

### தமிழ்நாடு அமைச்சரவை பதவி ஏற்பு விழா: ‘வந்தே மாதரம்’ பாடலுக்கு முதலிடம்!

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு தொடர்ந்து அவமரியாதை!

## தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம்!

**சென்னை, மே 22-**

**ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்குத் தள்ளப்பட்டு மீண்டும் வந்தே மாதரம் பாடல் முதலில் பாடப்பட்டுள்ளது. அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிய த.வெ.க. அரசுக்கு தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

தமிழ்நாட்டில் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், முடிவில் தேசிய கீதமும் பாடப்படுவது வழக்கமாகும். முந்தைய தி.மு.க. ஆட்சியில் அப்போதைய ஆளுநர் பல்வேறு நெருக்கடிகள் கொடுத்தும் தமிழ்த்தாய் வாழ்த்தே முதலில் பாடப்பட்டது. இறுதியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்பட்டது.

இதனால், ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் முதல் சட்டப் பேரவை கூட்டத்தொடரில் தனது உரையை வாசிக்காமல் ஆளுநர் திரும்பி சென்ற நிகழ்வுகளெல்லாம் அரங்கேறியது. ஆனால் அதற்கெல்லாம் அஞ்சாத திமுக அரசு, தமிழ்நாட்டின் மரபை மாற்றாமல் தொடர்ந்து பின்பற்றியது.

ஆனால் அதற்கடுத்து வந்த த.வெ.க அரசோ, புதிய ஆளுநரின் அழுத்தத்துக்கு அடிபணிந்து, தமிழ்நாட்டின் மரபை மீறி செயல்பட்டு வருகிறது. விஜய் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பின் போது, ஆளுநரின் உத்தரவுக்கு ஏற்ப தமிழ்த்தாய் வாழ்த்து 3வது இடத்துக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டு முதலில் வந்தே மாதரம் பாடலும், இரண்டாவதாக தேசிய கீதமும் பாடப்பட்டன. இதற்கு கடும் எதிர்ப்பும், கண்டனமும் எழுந்தது.

இதனையடுத்து விளக்கம் கொடுத்த த.வெ.க., அரசு, தமிழ்நாட்டின் மரபு இனி மீறப்படாது என்று உறுதியளித்தது. ஆனால், நேற்றும் அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்கு தள்ளப்பட்டது. ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்குத் தள்ளப்பட்டு மீண்டும் வந்தே மாதரம் பாடல் முதலில் பாடப்பட்டுள்ளது.

அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிய த.வெ.க. அரசுக்கு தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அடிபணிந்து, அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை தவெக அரசு பின்னுக்குத் தள்ளிவிட்டதாக குற்றச்சாட்டியுள்ளனர். தமிழ்த் தாயை பின்னுக்குத் தள்ளியது தான் புதிய மாற்றமா? என பல்வேறு தரப்பினரும் த.வெ.க., அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளனர்.

“மாற்றம்” என்று வேடமிட்டு வந்தவர்கள், தமிழர்களின் உயிர்மூச்சான “தமிழ்த்தாய் வாழ்த்தை” மூன்றாம் பட்சமாக நிறுத்தித், தமிழ்த்தாயின் முகத்தில் கரியைப் பூசியுள்ளனர்! என்று கண்டனம் தெரிவித்துள்ளனர். மரபுகளைச் சிதைத்துத் தமிழை அவமதிப்பதுதான் நீங்கள் ஊரெல்லாம் கூவிய மாற்றமா? என தவெக அரசை பலரும் விமர்சித்துள்ளனர். தமிழ்த்தாய் வாழ்த்தை பின்னுக்குத் தள்ளியது போல், தமிழ்நாட்டையும் தள்ளிவிடாதீர்கள் என பல்வேறு தரப்பினரும் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் அடையாளமாகவும், பண்பாட்டு விழுமியமாகவும் திகழும் தமிழ்த்தாய் வாழ்த்தை அரசு விழாவின் தொடக்கத்திலேயே பாடி கவுரவிப்பதே முறையானது என்று தெரிவித்துள்ளனர். பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில் கூட, அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடல் பாடப்படுவதில்லை. மேற்குவங்கத்தில் பாஜக அரசு பதவியேற்றபோது கூட அங்கு வந்தே மாதரம் பாடல் ஒலிக்கவில்லை. வந்தேமாதரம் ஒரு குறிப்பிட்ட கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட, மதச்சார்புடைய பாடல் என்பதால் நாட்டின் தேசிய கீதமாக இருக்க முடியாது என விடுதலை இயக்கக் காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!**

தமிழோடு விளையாடியவர்கள் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்கு தள்ளப்பட்டதை போலவே தமிழ்நாடு எல்லா வகையிலும் இனிமேல் பின்னுக்கு தள்ளப்படும் என்பதற்கு த.வெ.க., அமைச்சர்கள் பதவியேற்பு விழாவே சான்று என்று தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஆர்.எஸ்.பாரதி, த.வெ.க., அரசால் தமிழ்நாட்டுக்கு பெரும் தலைகுனிவும், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு தொடர் அவமதிப்பும் ஏற்பட்டுள்ளது என்று கூறினார். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்கு தள்ளப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அவர் தமிழோடு விளையாடியவர்கள் யாரும் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை என ஆர்.எஸ்.பாரதி உறுதிபட தெரிவித்தார்.

## டி.எம்.எஸ். அலுவலகத்தை முற்றுகையிட்டு மருத்துவர்கள் போராட்டம்!

சென்னை, மே 22-

தி.மு.க. ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்படாத 751 மருத்துவர்கள் சென்னை டிஎம்எஸ் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள 1,100 உதவி மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை, தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (எம்ஆர்பி) கடந்த 2025ம் ஆண்டு நவம்பர் 21ம் தேதி வெளியிட்டது.

இதற்கான தேர்வு கடந்த ஜனவரி 25ம் தேதி நடந்தது. விண்ணப்பித்திருந்த 25,172 பேரில் 20,867 பேர் தேர்வில் பங்கேற்றனர். அவர்களில் 16,986 பேர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்றவர்களின் சான்றிதழ்கள் சரிபார்ப்பு, இட ஒதுக்கீடு முறையில் 1,071 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களை கலந்தாய்வு மூலம் பணியில் சேர்ப்பதற்கான பணிகள் நடந்தன. 320 பேருக்கு ஆணை வழங்கப்பட்டது. பின் காலியிடங்கள் இல்லை என 751 பேருக்கு பணி ஆணை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் புதிய ஆட்சி வந்துள்ளதால், ஏற்கெனவே ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 751 பேருக்கும் பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என மருத்துவர்கள் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

## கரூர் சம்பவம்:

## போலீஸ் அதிகாரிகளை பழிவாங்கிய த.வெ.க. அரசு!

கரூர், மே 22-

கரூரில் 41 பேர் பலி வழக்கில் சிபிஐயிடம் உண்மையை கூறிய போலீஸ் அதிகாரிகளை விஜய் பழிவாங்கியதாக சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் விஜய் தலைமையில் த.வெ.க. அரசு அமைந்ததில் இருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், போலீசார் இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் ஒரே நாளில் 3 டி.எஸ்.பி.க்கள், 10 இன்ஸ்பெக்டர்கள், எஸ்ஐக்கள், தனிப்பிரிவு காவலர்கள் என 19 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கரூர் மாவட்டம் குளித்தலை டி.எஸ்.பி. செந்தில்குமார், கடலூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை டி.எஸ்.பி.யாகவும், கரூர் டவுன் டிஎஸ்பி செல்வராஜ், தூத்துக்குடி சமூக நீதி மற்றும் மனித உரிமை டி.எஸ்.பி.யாகவும், கரூர் புறநகர் டி.எஸ்.பி. அப்துல் கபூர், தர்மபுரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை டி.எஸ்.பி.யாகவும் தூக்கியடிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அனைவருமே டம்மி பதவிக்கு மாற்ற செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் மணிவண்ணன், தென்னிலை இன்ஸ்பெக்டர் திலக், சின்னதாராபுரம் இன்ஸ்பெக்டர் ராஜேந்திர பிரசாத், நங்கவரம் இன்ஸ்பெக்டர் சதீஸ்குமார் மற்றும் தனிப்பிரிவு போலீசார் ராஜாமணி, ராமலிங்கம், மோகன்ராஜ், கதிர்வேல் ஆகியோரும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை திருச்சி மத்திய மண்டல ஐஜி பாலகிருஷ்ணன் பிறப்பித்துள்ளார்.

### பல்வேறு மொழிகளில் பரப்பப்படும் பொய்கள் !

# த.வெ.க. அரசு மீது கட்டமைக்கப்படும் போலி பிம்பம்!

## சமூக வலை தளங்களில் விமர்சனம்!

**சென்னை, மே 22-**

**நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் முதல் முறையாகச் சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்து 108 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சி என்ற நிலையை அடைந்தது. தொடர்ந்து, தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த இடதுசாரிகள், வி.சி.க., ஐ.யூ.எம்.எல். ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மையைப் பெற்று கடந்த 10ம் தேதி முதல்வராகப் பதவியேற்றார் விஜய். தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்டது முதலே அந்தக் கட்சிக்கு ஆதரவாகச் சில நிறுவனங்கள் சமூக வலைதளங்களில் தீவிரமாக இயங்கிவருகின்றன. தேர்தலுக்கு முன்பாகத் தி.மு.க. மீது அவதூறுகளைப் பரப்புவதில் மட்டுமே அதீத கவனம் செலுத்தி இயங்கி வந்தார்கள்.**

பெரும்பாலும் அரசுக்கு எதிரான பொய்களைப் பரப்பி வந்தனர். அவை மக்களிடம் ஏற்படுத்திய தாக்கம் தேர்தல் முடிவுகளில் கணிசமான அளவில் எதிரொலித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். தேர்தல் முடிந்து த.வெ.க. அரசு அமைந்த பிறகு இன்னமும் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியுள்ளனர் தவெகவின் விர்சுவல் வாரியர்ஸ். இப்போது மற்ற கட்சிகள் மீது அவதூறு பரப்புவதைக் குறைத்துக் கொண்டு, முதல்வர் விஜய்க்கும் தவெக அரசுக்கும் ஆதரவான கட்டுக்கதைகளைப் பரப்பும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். நேரடியாக தவெக நிர்வாகிகள் இதைச் செய்யாமல், போலிக் கணக்குகளை உருவாக்கி இதைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, தவெக பொதுத் தொகுதிகளில் அதிக அளவு தலித் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றிபெற வைத்துள்ளது, அமைச்சர் கீர்த்தனா தான் முதல் பெண் அமைச்சர், த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் ஏழைகள் என ஏராளமான பொய்களைப் பரப்புவதில் அதிதீரமாகச் செயல்பட்டுவருகிறார்கள். தமிழில் மட்டுமல்லாமல் இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளிலும் பொய்களைப் பரப்பிவருகிறார்கள். முதல்வர் விஜய் பொறுப்பேற்ற பிறகு தனது இருக்கையில் வெள்ளை நிறத் துண்டை விரித்து அமர்ந்திருந்தார். ஆனால், அதை நீக்கச் சொல்லிச் சமூக வலைதளங்களில் கோரிக்கை வந்ததாகவும், அந்த கோரிக்கையை ஏற்று அதை விஜய் நீக்கியதாகவும், வேறு எந்த முதல்வரும் இதைச் செய்யவில்லை எனவும் பொய்யான தகவலைச் சமூக வலைதளங்களில் பரப்பி வருகிறார்கள்.

ஆனால், கடந்த காலங்களில் எந்த முதல்வரும் தனது இருக்கையில் துண்டு விரித்து அமர்ந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ஆமை முட்டைகளைப் பாதுகாத்து குஞ்சுகள் பொறித்த பிறகு கடலில் விடுவது வழக்கமாக நடைபெறும் நிகழ்வு. ஆனால், இந்த ஆண்டு முதல்வர் விஜய் பொறுப்பேற்ற பிறகுதான் இது நடைபெறுவது போலச் சமூக வலைதளங்களில் பொய்யான தகவலைப் பரப்பிவருகிறார்கள். இது தமிழில் மட்டுமல்லாமல், பல்வேறு இந்திய மொழிகளிலும் இந்தப் பொய்யைப் பரப்பிவருகிறார்கள். பெண்களின் பாதுகாப்புக்காக பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள அவசரகால பட்டன்களைத் தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு தற்போதுதான் பொருத்தியுள்ளார்கள் என்று பொய்யைப் பரப்பிவருகிறார்கள். ஆனால், அவை சில ஆண்டுகளுக்கு முன்பே பொருத்தப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமல்லாமல் ஏராளமான பொய்களை பரப்பி விஜய்யின் நல்லாட்சி என்ற போலி பிம்பத்தை இந்திய அளவில் கட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் பொய்களைப் பார்க்கும் இளைஞர்கள் அப்படியே நம்பிவிடவும் செய்கிறார்கள். கடந்த காலங்களில் அரசியலையும் சமூக நிகழ்வுகளையும் கவனிக்காதவர்களுக்கு விஜய்யில் இருந்துதான் அரசியல் தொடங்குகிறது. அவர்கள் சமூக வலைதளங்களில் விஜய் என்ற பிம்பத்தைப் பற்றிப் பரப்பப்படும் அனைத்துப் பொய்களையும் உண்மை என நம்பிவிடும் ஆபத்து உள்ளது. அந்தச் செய்தி உண்மையா, பொய்யா என ஆராய்ந்து பகுத்தறிவது இல்லை எனச் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

த.வெ.க. ஆட்சியில் மற்ற துறைகளில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கிறதோ இல்லையோ சமூக வலைதளங்களில் தவெகவினரால் பரப்பப்படும் பொய்களின் உண்மைத்தன்மையை ஆய்வு செய்வதற்கான பேக்ட் செக்கிங் துறையில் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று நெட்டிசன்கள் கலாய்த்து வருகிறார்கள்.

## த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் துவங்கிய கனிமவளக் கொள்ளை !

## விவசாயிகள் வேதனை

பண்ருட்டி, மே 22-

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றவுடன் கனிம வள கொள்ளை தலைவிரித்தாடுவதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் தென்பெண்ணை ஆற்றை ஒட்டிய பகுதிகளில் மணல் கொள்ளை ஒரே வாரத்தில் அதிகரித்துள்ளது. புதுப்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பட்டா நிலத்தில், சவுடு மண் எடுப்பதாக அனுமதித்து கடலூர் கனிமவளத்துறை கூடுதல் இயக்குனர் செல்வசேகர் துணையுடன் ஆற்று மணல் கொள்ளை அடிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

நான்கு குவாரிகள் அனுமதிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு ஆயிரம் லோடு மணல் கொள்ளையடிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற பத்தே நாட்களில் கனிமவளக் கொள்ளை விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

## ராகுல் காந்தி பெயரைக் குறிப்பிட்ட காங்கிரஸ் உறுப்பினரை எச்சரித்த ஆளுநர் !

சென்னை, மே 22-

அமைச்சர் பதவியேற்பு நிகழ்ச்சியில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி பெயரை குறிப்பிட்டதற்கு ஆளுநர் அர்லேகர் எதிர்ப்பு தெரிவித்தார்.

தமிழ்நாடு அமைச்சரவை விரிவாக்கத்தில் மேலும் 23 பேர் நேற்று அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராஜேஷ்குமாரும் அமைச்சராக பதவியேற்றார். உறுதிமொழி ஏற்பின்போது, ராகுல் காந்தி பெயரை அவர் குறிப்பிட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஆளுநர் ஆர்லேகர், காங்கிரஸ் உறுப்பினரை எச்சரித்தார். இதுபோன்ற பேச்சு, உறுதிமொழியின் ஒரு பகுதி அல்ல என்று ஆளுநர் எச்சரித்தார். இதனால், பதவியேற்பின் போது சற்று சலசலப்பு ஏற்பட்டது.